(ப - ரை.) 'பண்டையிற் கடும்பகல்வருதி' என்றது, பண்டு வருங் காலத்திலே வந்தாற்போலப் பிறர்க்குத்தோன்றக் கடும்பகற்கண்ணே வாரா நின்றாய்; எ - று. (ங)

கஅஎ. நெய்த † லிருங்கழி நெய்த னீக்கி
மீனுண் ‡ குருகினங் கான லல்குங்
கடலணிந் தன்றவ ளூரே
கடலினும் பெரிதெமக் கவருடை நட்பே.

எ - து, வாயில்வேண்டிவந்தார் தலைமகன் அன்புடைமை கூறியவழி வாயின்மறுக்குந் தலைமகள் சொல்லியது.

(ப - ரை.) நெய்தனீக்கி மீனுண்குருகு இளங்கானலில் அல்குமென்றது, பொதுமகளிரிடத்து ஊடனீக்கி இன்பநுகர்ந்து ஆண்டுத் தங்குவானென்பதாம். (ச)

---

[1]. இச்செய்யுளின் முதலிரண்டடி சிலபிரதிகளிற் காணப்படவில்லை.

(பி - ம்.) * 'வருந்திக் கையறு மாலை, மாலை நெய்தலுங் கூம்ப' † 'இருங் கழி' ‡ 'குருகினங்கானலல்குங்'

௪அரு. * அலங்கிதழ் நெய்தற் கொற்கை மூன்றுறை
யிலங்குமுத் துறைக்கு மெயிறுகெழு துவர்வா
யரம்போ முவ்வளைக் குறுமக
ணரம்பார்த் தன்ன தீங்கிள வியளே.

எ - து, 'ஆயமகளிருள் நின்னுல் நயக்கப்பட்டாள் யாவள்' என வினவிய தோழிக்குத் தலைமகன் சொல்லியது. (ரூ)

௪அசு. நாரை நல்லினங் கடிப்ப மகளிர்
நீர்வார் கூந்த லுளருந் துறைவ
பொங்குகழி நெய்த லுறைப்ப வித்துறைப்
பல்கால் வருஉந் தேரெனச்
† செல்லா தீமோ வென்றனள் யாயே.

எ - து, பகற்குறிக்கண்வந்து நீங்குந்தலைமகனைத் தோழி செறிப்பறி வுறீஇ வரைவுகடாயது.

(ப - ரை.) நாரையினங்கடிப்ப மகளிர் நீர்வார்கூந்தலை உளருந்துறைவ வென்றது, தம்மிடத்துக் குற்றம் நீக்கும் மகளிரையுடைய துறைவ; எ - று.

௪அள. நொதுமல் வாளர் கொள்ளா ரிவையே
‡ யெம்மொடு வந்து கடலாடு § மகளிரு
நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையா
ருடலகங் கொள்வோ ரின்மையிற்
றொடலைக் குற்ற சிலபூ வினரே.

எ - து, தோழி கையுறை மறுத்தது.

(ப - ரை.) 'நொதுமலாளர் கொள்ளாரிவையே' என்றது, நீயல்லாதாரில் இப்பூப்பறிப்பாரில்லை; எ - று. எம்மொடு வந்து கடலாடுமகளிரும் இங்ஙெய்தற்றழையாற் பாவைபுனையார்; தொடலைதொடுப்பாரும் இதனிற் சிலபூக் கொள்வதல்லது இப்பூத்தண்ணையே தொடலையாகப் புனைவாரில்லை; எ - று.

(பி - ம்.) * 'அலங்கிறை நெய்தல்'. † 'சொல்லாதீமோ'. ‡ 'எம்மொடு வந்த', 'எம்மொடுகலந்த'. § 'மகளிர்'.

கஅஅ. இருங்கழிச் சேயிரு னைப்புள் ளாருங்
கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை
*வைகறை மலரு நெய்தல்போலத்
தகைபெரி துடைய காதலி கண்ணே.

எ - து, விருந்துவாயிலாகப் புகுந்த தலைமகன் தலைவி இல்வாழ்க்கைச் சிறப்புக்கண்டு மகிழ்ந்து சொல்லியது.

(ப - ரை.) விடியற்காலை மலரும் நெய்தலைக் கண்ணிற்கு உவமையாகக் கூறிற்று, வந்தபொழுதே மலர்ந்த சிறப்புநோக்கி யெனக்கொள்க. 'இருங் கழிச் சேயிரு னைப்புள் ளாரும்' என்றது, விருந்தினர்நுகர்ச்சி கூறியவா றெனக் கொள்க. (அ)

கஅக. புன்னை நுண்டா துறைத்தரு நெய்தல்
பொன்படு மணியிற் பொற்பத் தோன்று
மெல்லம் புலம்பன் வந்தென
நல்லவா யின தோழியென் கண்ணே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன் வரைவான் வந்தழிக் கண்டு † உவகையோடு வந்த தோழி, 'நின் கண்மலர்ச்சிக்குக் காரணம் என்' என்றுவினவிய தலைவிக்குச் சொல்லியது.

(ப - ரை.) 'புன்னை நுண்டாது உறைத்தருநெய்தல் பொன்படுமணியிற் றோன்றும்' என்றது, நின்குடிப்பிறப்புப் பண்டையினும் சிறத்தற்குக் காரண மாயிற்றென்று அவன்வரைவு கூறியவாறும். (கூ)

கஉ0. தண்ணு நெய்தற் றளையவிழ் வான்பூ
‡ வெண்ணெ லரிநர் மாற்றின ரறுக்கு
மெல்லம் புலம்பன் மன்றவெம்
பல்லித ழுண்கண் பனிசெய் தோனே.

எ - து, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

(ப - ரை.) அரிவோர் நெய்தற்பூவைநீக்கி வெண்ணெல் அரியுமென்றது, தனக்கு அடுத்தது செய்தலன்றிப் பிறர்க்கு வருத்தஞ் செய்யானெனத் தலை மகன் குணம் கூறியவாறும். (கo)

கஉ.—நெய்தற்பத்து முற்றிற்று.

பி - மீ.) * 'வைகறைவருநெய்தல்.' † 'நகையொடுவந்த.' ‡ 'ஞண்ணெல்.'

உ0.—வளைப் பத்து.

கஙூக. கடற்கோடு செறிந்த * வளைவார் முன்கைக்
கழிப்பூத் தொடர்ந்த விருப்பல் கூந்தற்
கானன் ஞாழற் கவின்பெறு தழையள்
வரையர மகளிரி னரியளென்
னிறையரு நெஞ்சங் † கொண்டொளித் தோளே.

எ - து, 'நின்னுற் காணப்பட்டவள் எவ்விடத்து எத்தன்மையள்' என்று வினவிய பாங்கற்குத் தலைமகன் கூறியது. (க)

கஙூஉ. கோடுபுலங் கொட்பக் கடலெழுந்து முழங்கப்
பாடிமிழ் பனித்துறை யோடுகல முகைக்குந்
துறைவன் பிரிந்தென நெகிழ்ந்தன
வீங்கின மாதோ தோழியென் வளையே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன்வந்துழித் தலைவி முனிந்துகூறுவாள்போலத் தன்மெலிவு நீங்கினமை தோழிக்குச் சொல்லியது.

(ப - ரை.) 'கோடுபுலம் கொட்பக் கடலெழுந்து முழங்கப் பாடு இமிழ் பனித்துறை ஓடுகலமுகைக்கும்' என்றது, தொகுமலர் அகல நம்சுற்றத்தார் மகிழ அலர்கூறும் அயலார்சிதைய அவர்தேர் வந்ததென்பதாம். (உ)

கஙூங. வலம்புரி யுழுத வார்மண லடைகரை
யிலங்குகதிர் முத்த மிருள்கெட விமைக்குந்
துறைகெழு ‡ கொண்கனீ தந்த
வறைபுனல் வால்வளை நல்லவோ தாமே.

எ - து, வரையாது வந்தொழுகுந் தலைமகன் தலைமகட்கு வளைகொண்டு வந்து கொடுத்துழி, § 'பண்டைவளை போலாவாய் மெலிந்துழி நீங்கா நலனுடையவோ இவை' எனத் தலைமகள் மெலிவுசொல்லித் தோழி வரைவுகடாயது.

(ப - ரை.) முத்தம் 'இருணீங்க இமைக்குந்துறைவனுதலின், இவட்கு வருகின்ற நீங்கைக் கடிதின் நீக்கி || வரைந்துகொள வேண்டுமென்பதாம். (ங)

(பி - ம்.) 'மயிர்வார்முன்கை'. † 'கொண்டொழித்தோளே'. ‡ 'கொண்கனீ' § 'பண்டையிவள்வளை'. || 'வரைந்து கொளவேணும்'.

கக்ஷ. கடற்கோ டுறுத்த வரம்போ முல்வளை
யொண்டொடி மடவாற் கண்டிகுங் கொண்க
நன்னுதலின் றுமால் செய்தெனக்
கொன்னென்று கடுத்தன ளன்னையது நிலையே.

எ - து, பகற்குறிக்கண் வந்துநீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு மனைக்கண் நிகழ்ந்ததுகூறிச் * செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது. (ச)

கக்ஷஅ. வளைபடு முத்தம் பரதவர் பகருங்
கடல்கெழு கொண்கன் காதன் மடமகள்
கெடலருந் துயர நல்கிப்
படலின் பாயல் † வெளவி யோளே.

எ - து, வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிந்த தலைமகன் தனித் தணைய ஆற்றுளுய்ச் சொல்லியது.

(ப - ரை.) பெறுதற்கரியமுத்தைப் பரதவர்விற்கும் கடல்கெழுகொண்க னென்றது, அவர்கள் தாராதாரல்லர்; யாம் அவர்களுக்கு வேண்டுவனகொடுத் துக் கொள்ளமாட்டாது வருந்துகின்றேமென்பதாம். (ஙி)

கக்ஷக. கோடு செல்வளைக் ‡ கொழும்பல் கூந்த
லாய்தொடி மடவரல் வேண்டுதி யாயிற்
றெண்கழிச் சேயிறைப் படூஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ.

எ - து, குறைமறுக்கப்பட்டதலைமகன் பின்னும் குறைவேண்டியவழித் தோழி சொல்லியது.

(ப - ரை.) தெண்கழிச் சேயிறைப்பதூஉஞ் சேர்ப்பவென்றது, நினைத்தன அகப்படுத்தும்துறைவ; எ - று. (சு)

கக்ஷஎ. இலங்குவளை தெளிர்ப்ப வலவ னுட்டி
முகம்புதை § கதுப்பின ளிறைஞ்சினள் நிற்றே
புலம்புகொண் மாலை மறைய
நலங்கே ழாக நல்குவ ளெனக்கே.

எ. து, தலைமகன் இடந்தலைப்பாட்டிடைக்கண் ‘தலைவியது நிலைமைகண்டு சொல்லியது. (எ)

(பி - ம்.) *‘செறிப்பறீஇவரைவு’ † ‘வறுவியோளே’ ‡ ‘கொழுமணிக் கூந்தல்’ § ‘கதுப்பின ளாயத்து நின்றேளே’

கஙஅ. * வளையணி முன்கை வாலெயிற் † றமர்நகை
யிளைய ராடுந் தளைபவிழ் கானற்
‡ குறுந்துறை வினவி நின்ற
§ நெடுந்தோ ளண்ணற் கண்டிகும் யாமே.

எ - து, பரத்தையர்மனைக்கட் பண்ணுட்டங்கிப் பின்பு ஆற்றுமையே வாயிலாக வந்த தலைமகனை எதிர்ப்பட்டதோழி தலைமகட்குச் சொல்லியது.

(ப - ரை.) குறுந்துறை வினவிநின்ற நெடுந்தோளண்ணலென்றது, களவுக்காலத்து நிகழ்ந்ததனைக் கூறிற்று; தலைமகள் புலவி தீர்குதற்கும் யான் நெடுநாட்பிரிந்தமை கூறுகின்றவாறென்று அவன் வருந்துதற்குமெனக் கொள்க. (அ)

கஙஆ. கானலம் பெருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வானுயர் || நெடுமண லேறி யாஞது
காண்கம் வம்மோ தோழி
செறிவளை நெகிழ்த்தோ னெறிகட ஞடே.

எ - து, தலைமகன் ஒருவழித் தணந்தழி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்குந்தோழி சொல்லியது. (ஆ)

உ00. இலங்குவீங் கெல்வளை யாய் ¶ தூதல் கவினப்
பொலந்தேர்க் ** கொண்கன் வந்தன னினியே
விலங்கரி †† நெடுங்கண் ணெகிழ்மதி
நலங்கவர் பசலையை ‡‡ நகுக நாமே.

எ - து, உடன்போக்குத்துணிந்தவழி அதற்கு இரவின்கண் தலைமகன் வந்ததறிந்ததோழி தலைமகளைப் பாயலுணர்த்திச் சொல்லியது. (கo)

உ0.—வளைப்பத்து முற்றிற்று.

நெய்தன் முற்றிற்று.

அ ம் மு வ னு ர்.

(பி - மீ.) * 'ஞெளியிழை' † 'இன்னகை' ‡ 'விருந்தெனவினவி' § 'நெடுந்தோரண்ணல்' || 'நெடுவரையேறி' ¶ 'தூதல்கவின்பெற' ** 'கொண்கனும்' †† 'நெடுங்கண்ணனந்தறீர்மதி நலங்கிளர்' ‡‡ 'நகுகம்யாமே'

நடு—குறிஞ்சி.

உக.—அன்னைவாழிப் பத்து.

உ0க. அன்னைவாழிவேண் டன்னை யென்னை
* தாளு மலர்ந்தா னெமக்குந் தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
யென்ன மரங்கொ லவர்சார லவ்வே.

எ - து, நொதுமலர் வரைவின்கட் செவிலிகேட்குமாற்றால் தலைமகள் தோழிக்கு அறத்தொடுநிலை குறித்து உரைத்தது. (க)

உ0உ. அன்னைவாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத்தாமுங்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாட னூர்ந்த மாவே.

எ - து, தலைமகன் வரைதல் வேண்டித் தானேவருகின்றமை கண்ட தோழி உவந்தவுள்ளத்தளாய்த் தலைமகட்குக் காட்டிச் சொல்லியது. (உ)

உ0ங. அன்னைவாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய வவர்நாட்
டெவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலிழி நீரே.

எ - து, உடன்போய் மீண்டதலைமகள், 'நீ சென்றநாட்டு நீர் இனிய வல்ல; நீ எங்ஙனம் † நுகந்தாய்?' எனக் கேட்டதோழிக்குக் கூறியது. (ங)

உ0ச. அன்னைவாழிவேண் டன்னையஃ தெவன்கொல்
வரையர ‡ மகளிரி னிரையுடன் குழீஇப்
பெயர்வுழிப் பெயர்வுழித் தவிராது நோக்கி
கல்ல னல்ல லென்ப
தீயேன் றில்ல § மலிகிழ வோர்க்கே.

(பி - மீ.) * 'தாளு மலர்ந்தான்' † 'நுகர்ந்தவாறெனக்கேட்ட' ‡ 'மகளிர் நிரை' § 'மலிகிழவோற்கே'

எ - து, வரையாது வந்தொழுகுந் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலை மகள் தோழிக்குச் சொல்லியது. (சு)

உ0நி. அன்னுய் வாழிவேண் * டன்னையென் ரோழி
நணிநா ணுடைய † ணின்னு மஞ்சு
மொலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
மலர்ந்த ‡ மார்பிற் பாயற்
றுஞ்சிய வெய்ய ணேகோ யானே.

எ - து, நொதுமலர் வரைவுவேண்டிவிட்டுழித் தலைமகட்கு உளதாகிய வருத்தநோக்கி, 'இவள் இவ்வாறுதற்குக் காரணம் என்னை?' என்று வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது. (நி)

உ0கூ. அன்னுய் வாழிவேண் டன்னை யுவக்காண்
மாரிக் குன்றத்துக் § காப்பா ளன்னன்
றூவலி னணைந்த தொடலை யொள்வாட்
|| பாசி சூழ்ந்த பெருங்கழற்
றண்பனி வைகிய வரிக்கச் சினனே.

எ - து, இரவுக்குறிக்கண் தலைமகன்வந்து குறியிடத்து நின்றமை யறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது. (கூ)

உ0எ அன்னுய் வாழிவேண் ¶ டன்னை நன்று
மூணங்கல கொல்லோனின் றினையே யுவக்கா
** ணிணம்பொதி வழுக்கிற் ரோன்று
மழைதலை வைத்தவர் மணிநெடுங் குன்றே.

எ - து, 'மழையின்மையால் தினை உணங்கும், †† விளையமாட்டா; புனங் காப்பச்சென்று அவரை ‡‡ எதிர்ப்படலாமென்று எண்ணியிருந்த இது கூடா தாயிற்று' என வெறுத்திருந்த தலைமகட்குத் தோழி சொல்லியது. (எ)

(பி - ம்.) * 'அன்னைதோழி' † 'நின்னினுமஞ்சும்' ‡ 'மார்பிற்பாயிற் றுஞ்சிவெய்யள்' § 'காப்பானன்ன' || 'பாசிதூர்ந்த' ¶ 'அன்னைகன்றும்' ** 'நணம்பொதி' †† 'விளையமாட்டாதபுனம்' ‡‡ 'எதிர்ப்பட்டாலாமென்று'

உ0அ. அன்னாய் வாழிவேண் டன்னை கானவர்
கிழங்ககழ் நெடுங்குழி மல்க வேங்கைப்
பொன்மலி புதுவீத் தாஅ மவர்நாட்டு
மணிநிற மால்வரை மறைதொறிவ
ளறைமலர் நெடுங்க ணூர்ந்தன பனியே.

எ - து, செவிலிக்கு அறத்தொடுநின்றதோழி அவளால் வரைவுமாட்சிமைப்பட்டபின்பு, 'இவள் இவ்வாறுபட்ட வருத்தமெல்லாம் நின்னிற்றீர்ந்தது' என்பது குறிப்பிற்றோன்ற அவட்குச்சொல்லியது.

(ப - ரை.) கிழங்ககழ் குழிநிறைய வேங்கைமலர் பரக்குமென்றது, கொள்வார்க்குப் பயன்பட்டுத் தமக்குவந்த குறையைத் தம்புகழ் நிறைக்கும் பெருமையுடையாரென்பதாம். (அ)

உ0ஆ. அன்னாய் வாழிவேண் டன்னை நீமற்
றியானவர் * மறுத்தல் வேண்டுதி யாயிற்
கொண்ட லவரைப் பூவி னன்ன
வெண்டலை மாமழை சூடித்
தோன்றலா னுதவர் மணிநெடுங் குன்றே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிவின்கண் அவனை நீவுவுவிடாது ஆற்றுளாகியவழி, 'சிறிதுமறந்து ஆற்றவேண்டும்' என்றதோழிக்குத் தலைமகள்கூறியது.

(ப . ரை.) 'வெண்டலை..... .....ஆனுதவர்'என்றது, மழைபெய்தற்குக் காரணமாகிய இருட்சியால் மறையப்பெறாது விளங்கித் தோன்றுதலைநோக்கியெனக்கொள்க. (கூ)

உ0இ. அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைப்
புலவுச்சேர் துறுக லேறி யவர்நாட்டுப்
பூக்கெழு குன்ற நோக்கி நின்று
மணிபுரை வயங்கிழை நிலைபெறத்
தணிதற்கு மூரித்தவ ளுற்ற நோயே.


எ - து, காப்புமிகுதிக்கண் தலைமகள் மெலிவுகண்டு தெய்வத்தினுளுயிற்றென்று வெறியெடுப்புழித் தோழி செவிலிக்கு அறத்தொடுநின்றது.

(ப - ரை.) 'புலவுச்சேர்துறுகல்' என்றது, யாவும் தெய்வத்தினுளுயினவென்று மறிமுதலாயின கொன்று புலவுநாறும் நுங்குன்றென்பதாம். (கo)

உக.—அன்னாய் வாழிப்பத்து மூற்றிற்று.

(பி - ம்.) * 'மறத்தல்'

உஉ.—அன்னுய்ப் பத்து.



உகக' நெய்யொடு மயக்கிய * வுழுந்துநூற் றன்ன
வயலையஞ் சிலம்பின் றலையது
செயலையம் பகைத்தழை வாடு மன்னுய்.

எ - து, தலைமகன் ஆற்றுமைகண்டு கையுறையேற்றதோழி தலைமகள் தழையேற்கவேண்டிக் கூறியது. (க)

உகஉ. † சாத்த மரத்த பூழி லெழுபுகை
கூட்டுவிரை கமழு நாட
னறவற் கெவனே நாமகல் வன்னுய்.

எ - து, வரைவெதிர் கொள்ளார் ‡ தமர் அவண்மறுத்தவழித் தோழி செவிலிக்கு அறத்தொடுநின்றது.

(ப - ரை.) சாந்தமரத்தின் இடைநிலத்து உளவாகிய அகில்சுடுபுகை அச் சந்தனப்பூநாற்றத்தோடு கமழுநாடனென்றது, தனக்குவந்த வருத்தம் பாராது தனக்குத்துணையாயினுர் நலத்தொடுங்கூடி எல்லார்க்கும் பயன்பட ஒழுகும் ஒழுக்கத்தை யுடையானென்பதாம். (உ)

உகங. நறுவடி மாவத்து மூக்கிறு புதிர்ந்த
வீர்ந்தண் பெருவடுப் பாலையிற் குறவ
ருறைவீ ழாலியிற் றெருக்குஞ் சாரன்
மீமிசை நன்னுட் டவர்வரின்
யானுயிர் வாழ்தல் § கூடு மன்னுய்.

எ - து, 'வரைவொடுவருதலைத் துணிந்தான்' என்பது தோழிகூறக்கேட்ட தலைமகள் சொல்லியது.

(ப - ரை.) மாவின் மூக்கு இற்று உதிர்ந்தவடுக்களை ஆலிபோலத் தொகுக்கும் நாட்டையுடையானென்றது, விரும்புவனவற்றுக்குத் தாமாக முயலாது பெற்றுழிப்பேணும் இயல்பையுடையார்; எ - று. (ங)

(பி - ம்.) * 'உழுந்துநூற்றன்ன' † 'சாந்த' ‡ 'தமர்மறுத்தவழி' § 'கூடலாமன்னுய்'

உகச. சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழ
மிருங்கல் விடரளை * வீழ்ந்தென வெற்பிற்
பெருந்தே † னிறுஅல் கீறு நாடன்
பேரமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நன்னுட்டுச் செல்லு மன்னுய்.

எ - து, தலைமகன், 'ஒருவழித்தணப்பல்' என்று கூறியவதனை அவன் சிறைப்புறத்தாளுகத் தலைமகட்குத் தோழிசொல்லியது.

(ப - ரை.) பலவின்பழம் பிறர்க்குப்பயன்படாது கல்லளையில் வீழ்கின்றாழி அவ்விடத்துளதாகிய தேனிறுதலினையும் சிதைக்குமென்றது, தன்னுற் பெற்றதலம் எங்கள் இயற்கைநலத்தினையும் சிதைக்கின்றதென்பதாம்.

இதுகேட்டுக் கடிதின்வரைவாளுவது பயன். (ச)

உகஞ. கட்டளை யன்ன மணிநிறத் தும்பி
யிட்டிய குயின்ற துறைவயிற் செலீஇயர்
தட்டைத் தண்ணுமைப் பின்ன ரியவர்
தீங்குழ லாம்பலி னினிய விமிரும்
புதன்மலர் மாலையும் பிரிவோ
ரதனினுங் கொடிய செய்குவ ரன்னுய்.

எ - து, இரவுக்குறிநயந்த தலைமகள், பகற்குறிக்கண் வந்து நீங்குந் தலைமகன் சிறைப்புறத்தாளுகத் தோழிக்குச் சொல்லியது. (ரு)

உகசு. குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
நெடும்புதற் கானத்து மடப்பிடி யீன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்கு கொழுநிழ ‡ லொளிக்கு நாடற்குக்
கொய்திடு தளிரின் வாடினின்
மெய்பிறி தாத லெவன்கொ லன்னுய்.

எ - து, வன்புறவுநீட ஆற்றுளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறத் தாளுகத் தோழிகூறியது.

(ப - ரை.) புலியேற்றை பிடியீன்றகுழவியைக் கொள்ளவேண்டிக் காலம் பார்த்து மறைந்திருக்கும் நாடனென்றது, தன்வஞ்சனையாலே கின்பெண் மையை வௌவுகின்றானென்பதாம். (சு)

(பி - ம்.) * 'வீழ்ந்தன' † 'இறுமொடுகீறுநாடன்' ‡ 'ஒலிக்குநாடு'

உகஎ. பெருவரை வேங்கைப் பொன்மரு ணறுவீ
மானினப் பெருங்கிளை மேய லாருங்
கானக நாடன் வரகுமிவண்
மேனி * பசப்ப தெவன்கொ லன்னுய்.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன்மீட்சியுணர்ந்த தோழி ஆற்றுளாகிய தலைமகட்குச் சொல்லியது.

(ப - ரை.) இவணென்றது, இவ்விடத்து; எ - று. வேங்கைப்பூவை மானினமாருமென்றது, அவன்மணப்பெருஞ்செல்வம் நின்னிலையாகிய நாங்களும் நின்னேடு நுகர்வேமென்பதாம். (எ)

உகஅ. நுண்ணேர் புருவத்த கண்ணு மாடு
மயிர்வார் முன்கை † வளையுஞ் செறூஉங்
களிறுகோட் பிழைத்த கதஞ்சிறந் தெழுபுலி
யெழுதரு மழைபிற் குழுமும்
பெருங்க ணுடன் வருங்கொ லன்னுய்.

எ - து, தலைமகன் ‡ வரைவுவேண்டிவிடத் தமர் மறுத்துழி அதுகேட்டு, 'இஃது என்னுங்கொல்?' என்று ஆற்றுளாகிய தலைமகட்குத் தோழி தனக்கு நற்குறிசெய்யக்கண்டு, 'கடிதின்வந்து வரைவான்' எனச்சொல்லியது.

(ப - ரை.) தன்னுற் கொள்ளப்பட்ட களிறுதப்பினதற்குப் புலிதஞ்சிறந்து குழுமுமென்றது, நிணத்தனவற்றிற்குக் குறைவரின் அதற்கு வெகுண்டு முடிப்பான்; எ - று. (அ)

உகக. கருங்கால் வேங்கை மாத்தகட் டொள்வீ
யிருங்கல் வியலறை வரிப்பத் § தாஅ
நன்மலை நாடன் பிரிந்தென
வொண்ணுதல் பசப்ப தெவன்கொ லன்னுய்.

எ - து, வரைவிடைவைத்துப்பிரிந்தணுமைக்கண்ணே ஆற்றுளாகிய தலைமகட்குத் தோழிகூறியது.

(ப - ரை.) வேங்கைமலர் அகலறையிலே பரக்குநாடனென்றது, நம் பொல்லாவொழுக்கமறைய நல்லொழுக்கம் நமக்குஉதவும் நன்மையையுடையானென்பதாம். (கூ)

(பி - ம்.) * 'பசப்பறைவது' † 'வளையுஞ்செற்றும்' ‡ 'வரைவுவேண்டிய விடத்துத் தமர்' § 'தாஅய்'

உ உ ○. அலங்குமழை பொழிந்த வகன்க ணருவி
யாடுகழை யடுக்கத் திழிதரு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
மூயங்காது கழிந்த நாளிவண்
மயங்கிதழ் மழைக்கண் கலிழு மன்னுய்.

எ - து, தொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

(ப - ரை.) அலங்கு.....நாடனென்றது, இவண்மேல்வைத்த தண்ணளி நம்மிடத்தும்வந்து இடையறாது ஒழுகும்; எ - று. (கo)

உ உ.—அன்னுய்ப்பத்து முற்றிற்று.

உங.—அம்மவாழிப் பத்து.

உ உக. அம்ம வாழி தோழி காதலர்
பாவை யன்னவென் னுய்கவின் றொலைய
நன்மா மேனி பசப்பச்
* செல்வ லென்பதம் மலிகெழு நாடே.

எ - து, 'ஒருவழித்தணந்து வரைதற்குவேண்டுவன முடித்துவருவல்' என்று தலைமகன் கூறக்கேட்ட தலைமகள் அவன் சிறைப்புறத்தாஞய்க் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

(ப - ரை.) கடிதின்வரைதல்பயன். (க)

உ உஉ. அம்ம வாழி தோழி நம்மூர்
நளிர்துவர் துறையு ருந்தண் † மார்வ
னின்னினி வாரா மாறுகொல்
சின்னிரை யோதியென் னுதல்பசப் பதுவே.

எ - து, குறியிரண்டன்கண்ணும்வந்து ஒழுகுந்தலைமகன் இடையிட்டு வந்து சிறைப்புறத்துநின்றுழி, 'நின்னுதல் பசத்தற்குக்காரணம் என்னே?' என்றதோழிக்குத் தலைமகள் சொல்லியது. (உ)

(பி - ம்) * 'செல்வனென்ப' † 'மார்பணிவணினி'

உஉங. அம்ம வாழி தோழி நம்மலை
வரையா மிழியக் கோட னீடக்
காதலர்ப் பிரிந்தோர் கையற நலியுந்
தண்பனி வடந்தை * யச்சிர
முந்துவந் தனர்நங் காத லோரே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிந்ததலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வருகின்றமையறிந்ததோழி தலைமகட்கு மகிழ்ந்துசொல்லியது. (ங)

உஉச. அம்ம வாழி தோழி நம்மலை
மணிநிறங் கொண்ட மாமலை வெற்பிற்
றுணிநீ ரருவி நம்மோ டாட
லெளிய மன்ற லவர்க்கினி
யரிய வாகுதன் மருண்டனென் யானே.

எ - து, இற்செறிப்புணர்ந்ததலைமகள் ஆற்றுளாய்த் தலைமகன் சிறைப் புறத்தானாகத் தோழிக்குச்சொல்லியது. (ச)

உஉஞ அம்ம வாழி தோழி பைஞ்சுனைப்
பாசடை நிவந்த பனிமலர்க் குவளை
யுள்ளகங் கமழுங் கூந்தன் மெல்லிய
† லோதிக ழொண்ணுதல் பசத்த
லோரார் கொன்னங் காத லோரே.

எ - து, மெலிவுகூறி வரைவுகடாவக்கேட்ட தலைமகன் தான் வரைதற் பொருட்டால் ஒருவழித்தணந்து நீட்டித்தானாக, ஆற்றுளாகிய தலைமகட்குத் தோழி கூறியது. (ஞ)

உஉசு. அம்ம வாழி தோழி நம்மலை
நறுந்தண் சிலம்பி றூறுகூலைக் காந்தட்
கொங்குண் வண்டிற் பெயர்ந்துபுற மாறினின்
‡ வன்புடை விறற்கவின் கொண்ட
வன்பி லாளன் வந்தன னினியே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன் நீட்டித்து வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது. (கூ)

(பி - ம்.) * 'அற்சிரம்', 'அர்ச்சிரம்' † 'ஓதியொண்ணுதல்' ‡ 'வனப்புடை'

உஉள. அம்ம வாழி தோழி நாளு
நன்னுதல் பசப்பவு நறுந் * தோண் ஞெகிழவு
மாற்றலம் யாமென மதிப்பக் கூறி
நப்பிரிந் துறைந்தோர் மன்றவீ
† விட்டனை யோவவ ருற்ற சூளே.

எ - து, ஒருவழித்தணந்துவந்ததலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது. (எ)

உஉஅ. அம்ம வாழி தோழி நம்மூர்
நிரந்திலங் கருவிய நெடுமலை நாட
னிரந்துகுறை யுறுஅன் பெயரி
னென்னு வதுகொனம் மின்னுயிர் நிலையே.

எ - து, தலைமகன் வரைவுவேண்டிவிடத் தமர் மறுத்துழி அவர் கேட்கு மாற்றால் தலைமகட்குச்சொல்லுவாளாய்த் தோழி அறத்தொடுநின்றது.

(ப - ரை.) 'நிரந்து இலங்கு அருவிய நெடுமலைநாடன்' என்றது, சேர்ந்தாருடன் இடையறுத நட்பையுடையான்; எ - று. (அ)

உஉக. அம்ம வாழி தோழி நாமழப்
பன்னுள் பிரிந்த வறனி லாளன்
வந்தன னேமற் றிரவிற்
பொன்போல் விறற்கவின் கொள்ளுநின் னுதலே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டானென்பது கேட்டுத் தலைமகட்கு எய்திய கவினைத் தோழி தான் அறியாதாள்போன்று அவளிஞுவியது. (க)

உஙo. அம்ம வாழி தோழி நம்மொடு
சிறுதினைக் காவல ஞெகிப் பெரிதுநின்
மென்றோண் ஞெகிழவுந் திருநுதல் பசப்பவும்
பொன்போல் விறற்கவின் றொலைத்த
குன்ற நாடற் கயர்வார்நன் மணனே.

எ - து, தலைமகன் வரைவுவேண்டித்தமரைவிடுத்துழி மறுப்பர்கொல்லோ வென்று அச்சமுறுகின்ற தலைவிக்குத் தோழி சொல்லியது. (கo)

உங.—அம்மவாழிப்பத்து மூற்றிற்று.

(பி - ம்.) * 'தோணெகிழவும்' † 'விட்டவினையோ'

உசை.—தெய்யோப் பத்து.

உங்க. யாங்கு * வல் லுரையோ வோங்கல் வெற்ப
விரும்பல் கூந்தற் றிருந்திழை யிரவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு தெய்யோ.

எ - து, ஒருவழித் தணந்துவந்த தலைமகற்குத் தோழிகூறியது. (க)

உங்உ. போதார் கூந்த லியலணி யழுங்க
† வேதி லாளனை நீபிரிந் ததற்கே
யழலவிர் மணிப்பூ ணனையப்
பெயலா னுவென் கண்ணே தெய்யோ.

எ - து, ஒருவழித் தணந்துவந்ததலைமகன், 'நான்பிரிந்தகாட்கண் நீர் என்செய்தீர்?' எனக்கேட்கத் தோழி அவற்குச் சொல்லியது. (உ)

உங்ங. வருவை யல்லை ‡ வாடைநனி கொடிதே
யருவரை மருங்கி னுய்மணி வரன்றி
யொல்லென விழிதரு § மருவினின்
கல்லுடை நாட்டுச் || செல்ல றெய்யோ.

எ - து, 'ஒருவழித்தணந்து வரையவேண்டும்' என்றதலைமகற்குத் தோழி சொல்லியது.

(பி - னா.) 'ஆய்மணிவரன்றி ஒல்லென இழிதருமருவினின் கல்லுடை நாட்டு' என்றது, 'செல்லின் வரைதற்கு வேண்டுவன கொண்டு வருவாயாக' என்று உணர்த்தியவாறு. (ங)

உங்ச. மின்னவிர் வயங்கிழை னெகிழச் சாஅய்ப்
நன்னுதல் ¶ பசத்த லாவது துன்னிக்
கனவிற் காணு மிவளே
நனவிற் காணுணின் மார்பே தெய்யோ.

(பி - ம்.) * 'வல்லுனையோ', 'வல்லினையோ' † 'ஏதிலாட்டியை' ‡ 'வாடை கொடிதே' § 'அருவிறுன்' || 'செல்லேறெய்யோ' ¶ 'பசத்தலையாவது'

எ - து, இடைவிடாது வந்து ஒழுகாநின்றே களவுநீடாமல் வரைதற்கு முயல்கின்ற தலைமகன் தலைமகள் வேறுபாடுகண்டு, 'இதற்குக் காரணம்' என்னென்றுவினவியவழி, 'நின்னேக்கனவிற்கண்டு விழித்தக்காணுளாய் வந்தது' எனத்தோழிசொல்லி வரைவுமுடுக்கியது. (ச)

உகுடு. கையுற வீழ்ந்த மையில் வானமொ
டரிது * காதலர்ப் பொழுதே யதனுற்
றெரியிழை தெளிர்ப்ப முயங்கிப்
பிரியல மென்கமோ வெழுகமோ தெய்யோ.

எ - து, உடன்போக்கு நேர்வித்தபின்பு, தலைமகன் உடன்கொண்டு போவான் இடையாமத்துவந்துழித் தலைமகட்குத் தோழிசொல்லியது. (ஞ)

உகுசு. அன்னையு மறிந்தன ளலரு மாயின்று
நன்மனை நெடுநகர் புலம்புகொள வுறுதரு
மின்னு வாடையு மலையு
நும்மூர்ச் செல்க மெழுகமோ தெய்யோ.

எ - து, களவொழுக்கம் வெளிப்பட்டமையும் தம் மெலிவுமுணர்த்தித் தோழி உடன்போக்குநயந்தாள்போன்று வரைவுகடாயது. (சு)

உகுஎ. காமங் கடவ † வுள்ள மினைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவ மாயி
னேங்கித் தோன்று முயர்வரைக்
கியாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ.

எ - து, அல்லகுறிப்பட்டு நீங்கிய தலைமகனை வந்திலனுகக்கொண்டு அவன் பின்புவந்துழி அவற்குத் தோழிசொல்லியது. (எ)

உகுஅ. வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினுங்
குருமயிர்ப் புருவை யாசையி னல்கு
மாஅ லருவித் தண்பெருஞ் சிலம்ப
‡ நீயிவண் வருஉங் காலை
மேவரு மாதோ விவணலனே தெய்யோ.

எ - து, வரையாது வந்தொழுகுந் தலைமகனுக்கு 'இவள்கவின் நீ வந்த காலத்து வருதலால் நீ போனகாலத்து அதன்றிலைவு உனக்கு அறியப் படாது' எனத் தோழிசொல்லி வரைவுகடாயது.

(பி - ம்.) * 'காதலர் பொழுதே' † 'உள்ளமினைய', 'உள்ளமினைப்ப' ‡ 'நீயவண்'

(ப - ரை.) வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும் பின்பு வரக்கூடு மென்னும் ஆசையாலே புருவை தங்குமென்றது, இவளும் இவ்வாறே நின்னைக் காணலாமென்னும் ஆசையாலே உயிரோடு வாழாநின்றாளென்பதாம். (அ)

உருக. * சுரும்புணக் களித்த புகர்முக வேழ
மிரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉநின்
குன்றுகெழு நன்னாட்டுச் சென்ற பின்றை
நேரிறைப் பணைத்தோண் ஞெகிழ
வாரா யாயின் வாழேந் தெய்யோ.

எ - து, 'வரைவிடைவைத்துப் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழிகூறியது.

(ப - ரை.) மதவேழம் துறுகல்லைப் பிடியென்று தழுவுநாடனுதலால் நினக்குத் தகுதியல்லாதாளொருத்தியைத் தகுதியுடையாளென்று வரையவுங் கூடுமென நகையாடிக்கூறியது. (கூ)

உரo. † அறியே மல்லே மறிந்தன மாதோ
பொறிவரிச் சிறைய வண்டின மொய்ப்பச்
சாந்த நாறு நறியோள்
கூந்த னாறுநின் ‡ மார்பே தெய்யோ.

எ - து, தலைமகற்குப் புறத்தொழுக்கமுளதாணமை § யறிந்து தலைமகள் புலந்தவழி, அவன் அதனை இல்லையென்று மறைத்தானுகத் தோழி சொல்லியது. (கo)

உச.—தெய்யோப்பத்து முற்றிற்று.

உரு.—வெறிப் பத்து.

உரக. நம்முறு துயர நோக்கி யன்னை
வேலற் றந்தா ளாயினவ் வேலன்
வெறிகமழ் நாடன் கேண்மை
யறியுமோ தில்ல செறி || யெயிற் றேயே.

(பி - ம்.) * 'கரும்புணக்களித்த.' † 'அறியேமல்லோம்' ‡ 'மார்பேஎ.' § 'அறிந்த தலைமகள்' || 'எயிற்றேயே'

எ - து, இற்செறித்தவழித் தலைமகட்கு எய்திய மெலிவுகண்டு, 'இஃது எற்றினாயிற்று ?' என்று வேலனைக்கேட்பத் தணிந்துழி, அறத்தொடுநிலை தணிந்ததோழி செவிலிகேட்குமாற்றால் தலைமகட்குச்சொல்லியது. (க)

உசஉ. அறியா மையின் வெறியென மயங்கி
யன்னையு மருந்துய ருழந்தன * ளதனா
லெய்யாது விடுதலோ கொடிதே நிரையித
ழாய்மல ருண்கண் பசப்பச்
சேய்மலை நாடன் செய்த நோயே.

எ - து, தலைமகள் அறத்தொடுநிலை நயப்பவேண்டித் தோழி அவட்குச் சொல்லியது.

(ப - ரை.) சேய்மலைநாடன்செய்த நோயை அன்னை அறியாதுவிடுதல் கொடிது ; அறிவிக்கவேண்டு மென்பதாம். (உ)

உசஙு. கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
யறியா வேலன் வெறியெனக் கூறு
மதுமனங் † கொள்குவை யணையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே.

எ - து, தாயுழை அறியாமைகூறித் தோழி வெறிவிலக்கியது.

(ப - ரை.) அறியாவேலன் யாதுகேட்பினும் வெறியெனக்கூறும்; அவனை இதற்கும் கேட்க மனங்கொள்ளாதின்றாய் ; எ - று. (ங)

உசச. அம்ம வாழி தோழி ‡ பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடா னெயி
னென்பயஞ் செய்யுமோ § வேலற்கவ் வெறியே.

எ - து, வெறியாடல் தணிந்துழி விலக்கலுறுந்தோழி செவிலிகேட்கு மாற்றால் தலைமகட்குச் சொல்லியது. (ச)

(பி - ம்.) * 'அதனா னறியாதுவிடுதலோ' † 'கொள்வையன்னையிவள்' ‡ 'புனமலர்' § 'வேலற்குவெறியே'

உசநி. பொய்யா மரபி னூர்முது வேலன்
கழங்குமெய்ப் படுத்துக் கன்னந் தூக்கி
முருகென * மொழியு மாயிற்
கெழுதகை கொல்லிவ ளணங்கி யோற்கே.

எ - து, தலைமகன் சிறைப்புறத்தாளாக வெறியறிவுறீஇத் தோழி வரைவு கடாயது.

(ப - வி.) கன்னமென்பது நோய்தணித்தற்குப் பண்ணிக்கொடுக்கும் படிமம். கெழுதகையென்பது, உரிமை; இவள் அணங்கியோற்கு வெறியாட்டு உரிமையன்றென்பதாம். (இ)

உசசு. வெறிசெறித் தனனே வேலன் கறிய
கன்முகை வயப்புலி கழங்குமெய்ப் படூஉ
.....
மெய்ம்மை யன்ன பெண்பாற் புணர்ந்து
மன்றிற் பையு ளுருங்
குன்ற நாட னுறீஇய நோயே.

எ - து, வரையாது வந்தொழுகுந் தலைமகன் சிறைப்புறத்தாளுய்ந்ன் றுழி அவன் கேட்குமாற்றுல் வெறிவிகழாநின்றமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

(ப - வி.) பயிர்வினைப்பார் விலங்குகள் கலியாமைக்குக் கழலைக் கண்ணுக வுறுத்திப் பொய்ம்மைவகையாற் பண்ணிவைத்த பெண்பாற்புலியைப் புணர்ந்து புலிப்போத்துப் படப்பைநடுவே துயரந்தீருமென்றது, வரைந்து கொளநினையாது இக்களவிற்புணர்கின்ற மாயப்புணர்ச்சியானே இன்பம்முடிய நுகர்கின்றனென்பதாம். (சு)

உசஎ. அன்னை தந்த தாகுவ தறிவன்
பொன்னகர் வரைப்பிற் கன்னந் தூக்கி
முருகென மொழியு மாயி
னருவரை நாடன் பெயர்கொலோ வதுவே.

எ - து, வெறிவிலக்கலுறுந்தோழி தமர்கேட்பத் தலைமகளை வினவுவா ளாய்ச் சொல்லியது. (எ)

உசஅ. பெய்ம்மணன் முற்றங் கவின்பெற வியற்றி
மலைவான் கொண்ட சினைய வேலன்
† கழங்கினு னறிகுவ தென்று
னன்று லம்ப நின்றவி ணலனே.

(பி - ம்.) * 'மொழியுமாகின்' † 'கழங்குதானறிகுவது'

எ - து, தலைமகள்வேறுபாடு கழங்கினுற்றெரியுமென்று வேலன்கூறிய வழி, அதனைப்பொய்யென இகழ்ந்ததோழி வெறிவிலக்கிச் செவிலிக்கு * அறத் தொடுநின்றது.

(ப - ரை.) நின்றவிவள் நலனென்றது, கற்புடைமையை. (அ)

உசுக. பெய்ம்மணல் வரைப்பிற் கழங்குபடுத் தண்ணைக்கு
முருகென மொழியும் வேலன் மற்றவன்
வாழிய விலங்கு மருவிச்
சூர்மலை நாடனை யறியா தோனே.

எ - து, வேலன்கூறியமாற்றத்தை மெய்யெனக்கொண்ட தாய்கேட்பத் தலைமகட்குத் தோழிகூறியது. (கூ)

உருo. † பொய்ப்படு பதியாக் கழங்கே மெய்யே
மணிவரைக் கட்சி ‡ மடமயி லாலுஞம்
§ மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோ
னுண்டகை விறல்வே லல்லனிவள்
பூண்டாங் கிளமுலை யணங்கி யோனே.

எ - து, தலைமகட்குவந்தநோய் முருகனல் வந்தமை இக்கழங்குகூறிற் றென்று வேலன்சொன்னானென்பது கேட்டதோழி அக்கழங்கிற்கு உரைப்பா ளாய்ச் செவிலி கேட்குமாற்றால் அறத்தொடுநிலைகுறித்துச் சொல்லியது. (கo)

உருஎ.—வெறிப்பத்து முற்றிற்று.

உசு.—குன்றக்குறவன் பத்து.

உருக. குன்றக் குறவ னுர்ப்பி னெழிலி
நுண்ப லழிதுளி பொழியு நாட
நெடுவரைப் படப்பை நும்மூர்க்
கடுவர லருவி காணினு மழுமே.

(பி - ம்.) * 'அறத்தொடு நிற்பான்கூறியது' † 'பொய்யபெழியா' ‡ 'மட மயிலாயகம்' § 'வளர்ந்தவள்ளி'

எ - து, வரையாதுவந்தொழுகும் தலைமகற்கு வரைவுவேட்ட தோழி கூறியது.

(ப - ரை.) 'நுண்மூர்க் கடுவரல் அருவி காணினும் அழுமே' என்றது, அது நின்மலையினின்றும் வீழ்கின்றவருவியென்றதுகொண்டு அதற்கு நின் கொடுமைகூறி இவள் அழும்; எ - று. குறவன் உழவுமுதலாகிய வினைக்கு ஆர்ப்பின், அதற்கு இன்றியமையாதநீரை நுண்மழைபொழியும் நாடனுகி வைத்தும் எம்வேட்கையறிந்து அதற்குத்தக ஒழுகுகின்றிலையென்பதாம். (க)

உநிஉ. குன்றக் * குறவன் புல்வேய் குரம்பை
மன்ற டிளமழை மறைக்கு நாடன்
† புரையோன் வாழி தோழி ‡ விரைபெய
லரும்பனி யஞ்சிய கூதிர்ப்
பெருந்தண் வாடையின் முந்துவந் தனனே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிந்ததலைமகன் குறித்தபருவத்திற்கு முன்னே வந்தானுக § உவந்ததோழி தலைமகட்குச் சொல்லியது.

(ப - ரை.) குறவனது புல்வேய்குரம்பைப்பொல்லாங்கினை இளமழை மறைக்கும் நாடனென்றது, பிரிவின்கண் தங்கட்குவந்த துன்பத்தை இவன் மறைத்ததுநோக்கிக் கூறியவாறு. (உ)

உநிஊ. குன்றக் குறவன் சாந்த நறும்புகை
தேங்கமழ் சிலம்பின் வரையகங் கமழுங்
|| கானக நாடன் வரையின்
மன்றலு ¶ முடையள்கொ ரோழி யாயே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிந்ததலைமகன் வரைவொடு புகுதரா நின்றுனென்பது தோழிகூறக்கேட்ட தலைமகள் அவட்குச் சொல்லியது.

(ப - ரை.) தேன்நாறுகின்ற மலைக்கண்ணே குறவன்சாந்தநறும்புகை கமழுமென்றது, நம்மணைக்கட்செய்கின்ற சிறப்புக்குமேலே மணவினையால் அவர்செய்யுஞ் ** சிறப்புமிகும்...வண்ணம் விளைப்பாள்கொல்; எ - று. (ஊ)

(பி - ம்.) * 'குறவர்புல்' † 'புரைவன்' ‡ 'விரையல்' § 'உவந்த தோழி' || 'கானநாடன்' ¶ 'உடையகொரோழியானே' ** 'சிறப்புப்பெறும் வண்ணம்'

உநிச. குன்றக் குறவ னுரை மறுத்தென
நறும்புகை சூழ்ந்து காந்த ணுறும்
வண்டிமிர் சுடர்நுதற் குறுமகள்
கொண்டனர் செல்வர்தங் குன்றுகெழு நாட்டே.

எ - து, உடன்போக்கு உடன்படவேண்டிய தோழி தலைமகட்குச்சொல்லியது. (ச)

உநிந. குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர * மகளிர்ப் புரையுஞ் சாய்ல
ளைய ளரும்பிய முலையள்
† செய்ய வாயினண் மார்பினள் சுணங்கே.

எ - து, 'நின்னுக்காணப்பட்டவள் எத்தன்மையள் ?' என்றபாங்கற்குத் தலைமகன் சொல்லியது. (ந)

உநிசு. குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் ‡ முலைவா ளெயிற்ற
ளிளைய ளாயினு § மாரணங் கினளே.

எ - து, 'நீ கூறுகின்றவள் நின்னை வருத்தும்பருவத்தளல்லள்' என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது. (சு)

உநிஎ. குன்றக் குறவன் கடவுட் பேணி
யிரந்தனன் பெற்ற வெல்வளைக் குறுமக
ளாயரி நெடுங்கண் கலிழச்
|| சேயதாற் றெய்யநீ பிரியு நாடே.

எ - து, 'வரைவிடைவைத்துப் பிரிவல்' என்றதலைமகற்குத் தோழி உடன்படாது கூறியது. (எ)

உநிஅ. குன்றக் குறவன் காதன் மடமக
ளணிமயி லன்ன வசைநடைக் கொடிச்சியைப்
பெருவரை நாடன் வரையு மாயிற்
கொடுத்தனெ மாயிலெ னன்றே .
யின்னு மாளுது நன்னுத றுயரே.

(பி - மீ.) * 'மகளிர்புரையும்' † 'செய்யவாயள்' ‡ 'முலைவாய் வாளெயிற், றிளையள்', 'முலைவாயெயிற்றள்' § 'மன்னணங்கினளே' || 'சேய்த்தாற்'

எ - து, வரைவுவேண்டிவிட மறுத்தழித் தமர்க்குரைப்பாளாய் வரையாதுவந்தொழுகுந் தலைமகற்குத் தோழி அவன்மலைகாண்டலேபற்றுகத் தாங்கள் உயிர்வாழ்கின்றமைதோன்றச் சொல்லியது. (அ)

உஅகூ. குன்றக் குறவன் காதன் மடமகண்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த வீர்நறுங் கையண்
மலர்ந்த காந்த ணுறிக்
கலிழ்ந்த கண்ணளெம் மனைங்கி யோளே.

எ - து, வரையத்துணிந்த தலைமகன் வரைவுமுடித்தற்குத் தலைமகள் வருந்துகின்றவருத்தம் தோழிகாட்டக்கண்டு இனி அது கடிகமுடியுமென உவந்தவுள்ளத்தளாய்த் தன்னுள்ளே சொல்லியது. (கூ)

உசுo. குன்றக் குறவன் காதன் மடமகண்
மென்றோட் கொடிச்சியைப் * பெறற்கரிது தில்ல,
பைம்புறப் படுகிளி யோப்பலர்
புன்புல மயக்கத்து விளைந்தன தினையே.

எ - து, பகற்குறிக்கண்வந்ததலைமகனைத் தோழி 'இனிப் புனங்காவற்கு வாரோம்' எனக்கூறி வரைவுகடாயது.

(ப - ரை.) விளைந்தனவென்றது முற்றினவென்றவாறு. (கo)

உசூ —குன்றக்குறவன்பத்து முற்றிற்று.

உஎ.—கேழற் பத்து.

உசுக. மென்றினை மேய்ந்த † தறுகட் பன்றி
வன்க லடுக்கத்துத் துஞ்சு நாட
னெஞ்சை யறிதல் லஞ்சிக்கொ
‡ லதுவே மன்ற வாரா மையே.

எ - து, அல்லகுறிப்பட்டுத் தலைமகன்நீங்கினமை அறியாதாள்போன்று தோழி, பிற்றைஞான்று அவன் சிறைப்புறத்தானாய்நிற்பத் தலைமகட்குச் சொல்லியது.

(பி - ம்.) * 'பெறற்கரிதில்ல' † 'சிறுகட்பன்றி' ‡ 'அதுவேதெய்ய'

(ப - ரை.) தினைமேய்ந்தபன்றி கல்லடுக்கத்துத் துஞ்சும்நாடனென்றது, தான்வேண்டின இன்பநுகர்ந்து இனிது கண்படுதலல்லது வரைதற்கு வேண்டுவன முயலாதான்; எ - று. (க)

உகூஉ. சிறுதினை மேய்ந்த தறுகட் பன்றி
துறுக லடுக்கத்துத் துணையொடு வதியு
மிலங்குமலை நாடன் வரூஉ
மருந்து மறியுங்கொ ரோழியவன் விருப்பே.

எ - து, 'வரைந்துகொள்ளநினைக்கிலன்' என்று வேறுபட்டதலைமகள், 'அவன் நின்மேல் விருப்பமுடையன், நீ நோகின்றது என்னை?' என்றதோழிக்குச் சொல்லியது.

(ப - ரை.) சிறுதினைமேய்ந்த தறுகட்பன்றி துறுகல் அடுக்கத்துத் துணையொடுவதியுநாடனென்றது, களவொழுக்கத்தான் வரும் சிற்றின்பமின்றியே வரைந்துகொண்டு நின்னோடு ஒழுகுவனெனத் தோழிகூறியவதனைத் தலைமகள்கொண்டு கூறிற்றெனக்கொள்க (உ)

உகூ. நன்பொ னன்ன புனிறுதீ ரேனல்
கட்டூ ரன்ன கேழன் மாந்துங்
குன்றுகெழு நாடன் முனும்
வந்தனன் வந்தன் றோழியென் னலனே.

எ - து, வரைவுநீடவைத்துப் பிரிந்ததலைமகன் மீண்டமையறிந்ததலைமகள், 'நீ தொலைந்தநலம் இன்று எய்தியகாரணம் என்னை?' என்றதோழிக்குச் சொல்லியது.

(ப - ரை.) பொன்போன்றதினையைக் கேழல் மாந்துநாடனென்றது, தன்னூட்டிவாழும் விலங்குகளும் தனக்குவேண்டுவன குறைவின்றிப்பெற்று இன்புறுகரும் நாடன்; எ - று. (ங)

உகூக. இளம்பிறை யன்ன கோட்ட கேழல்
களங்கனி யன்ன பெண்பாற் புணரு
மயங்கிகழ் சிலம்ப கண்டிகும்
* பயந்தன மாதோ நீ நயந்தோள் கண்ணே.

எ - து, வரையாதுவந்தொழுகுந் தலைமகனைப் பகற்குறிக்கண்ணே எதிர்ப்பட்டுத் தோழி வரைவுகடாயது.

(ப - ரை.) கேழல் பிணைவப்புணருமென்றது; அறிவில்லாதனவொழுகுமொழுக்கமும் நின்மாட்டுக் கண்டிலேம்; எ - று (ச)

(பி - ம்.) * 'பசந்தன'

உசுநி. * புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை
வளைவெண் மருப்பிற் கேழல் புரக்குங்
குன்றுகெழு † நாடன் மறந்தனன்
பொன்போற் புதல்வனை யென்னீத் தோனே.

எ - து, பரத்தையிடத்தாளுக ஒழுகுகின்ற தலைமகன்விடித்த வாயின் மாக்கட்குத் தலைமகள் சொல்லியது.

(ப - ரை.) புலியாற்கொல்லப்பட்ட தன் பிணவின் குட்டியைத் தந்தை யாகியகேழல் புரக்கும்நாடனென்றது, பரத்தையர்காரணமாக யானிருந்தால் தன்புதல்வனைத் தானேவளர்க்கத்துணிந்து என்னை நீத்தானென்பதாம். (நி)

உசுசு. சிறுக்கட் பன்றிப் பெருஞ்சின வொருத்தலொடு
குறுக்கை யிரும்புலி பொருஉ நாட
‡ நனிநா ணுடையமை மன்ற
பனிப்பயந் தனனீ நயந்தோள் கண்ணே.

எ - து, நொதுமலர்வரைவு பிறந்துழித் தலைமகட்கு உளதாகிய வேறு பாடு தோழிகூறித் தலைமகன் வரைவுகடாயது.

(ப - ரை.) பன்றியொருத்தலொடு புலிபொருமென்றது, நினக்கு நிக ரல்லாதார் வந்துதலைப்படவும் அதனைநீக்காது இடங்கொடுத்து ஒழுகாநின்ற தென்பதாம். (சு)

உசுள. சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்த
றுறுக லடுக்கத்து வில்லோர் மாற்றி
யைவனங் கவருங் குன்ற நாடன்
வண்டுபடு கூந்தலைப் பேணிப்
§ பண்பில சொல்லுந் தேறுதல் செத்தே.

எ - து, தலைமகளைத் தலைமகன் வரைவலெனத் தெளித்தானென்று அவள் கூறக்கேட்டதோழி அவன் சிறைப்புறத்தானுகச் சொல்லியது.

(ப - ரை.) 'பண்பிலசொல்லும்' என்றது, பொய்ம்மொழிகளைச் சொல் லும்; எ . று. பன்றியொருத்தல் காவலரையோட்டி ஐவனநெற் கவருமென் றது, களவினிற் காவலரைவென்று பெறும் இன்பமே விரும்புவான்; எ - று. 'தேறுதல் செத்தே' என்றது, தான்சொன்ன வார்த்தைகளை இவள் மெய்யாகக் கொள்ளுமென்பது கருதி; ஓ - று. (எ)

(பி - ம்.) * 'புலிகொள்' † 'நாடன்மன்றதன்' ‡ 'நனிநாணுடையை மன்றதன்' § 'பண்பிலசெல்லும்'

உசுஅ. தாஅ யிழந்த தழுவரிக் குருளையொடு
* வளமலைச் சிறுதினை யுணீஇக் கானவர்
வரையோங் குயர்சிமைக் கேழ லுறங்கு
நன்மலை நாடன் பிரித
லென்பயக் கும்மோ நம்விட்டுத் துறந்தே.

எ - து, 'அவன் குறிப்பிருந்தவாற்றால் நம்மைப் பிரிந்துவந்தல்லது வரையமாட்டான் போன்றிருந்தது' எனத் தலைமகள் கூறக்கேட்ட தோழி அவட்குத் தலைமகன் சிறைப்புறத்தாளைச் சொல்லியது.

(ப - ரை.) தாயிழந்த குருளையோடே தினையையுண்டு கேழல் உறங்குகின்ற இத்தன்மையையுடைய நாடனுதலால், இவ்வாறுநிகழ்தல் கூடாதென்பதாம். (அ)

உசுஆ. கேழ லுழுதெனக் கிளர்ந்த வெருவை
விளைந்த செறுவிற் றோன்று நாடன்
வாரா தவணுறை நீடி னோர்வளை
யினையி ரோதி நீயழத்
துணைநனி † யிழக்குவென் மடமை யானே

எ - து, குறைநயப்பக்கூறித் ‡ தலைமகளைக் கூட்டியதோழி அவன் இடையிட்டுவந்து சிறைப்புறத்தானின் றழித் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் செல்லியது

(ப - ரை.) 'துணைநனியிழக்குவென் மடமையான்' என்றது, நீ எனக்குத்துணையாதலையிழப்பேன் யான், அவனைத்தேறி முன்செய்த மடமையான் எ - று. இறந்துபடுவேனென்பதாம். நீ அழ வாராது அவணுறை நீடினெனக் கூட்டுக. கேழலுழுததாக எருவை நெல்விளைந்தசெறுப்போலத் தோன்று மென்றது, வேட்கைநலியத் தனக்குவந்த வருத்தத்தானே தலைசாய்த்து நல்லாரைப்போல ஒழுகியதுணையேயுள்ளதென்பதாம். (கூ)

உஎ0. கிழங்ககழ் கேழ லுழுத சிலம்பிற்
§ றலைவிளை கானவர் கொய்தனர் பெயரும்
புல்லென் குன்றத்துப் புலம்புகொ ணெடுவரை
காணினுங் கலிழுநோய் செத்துத்
தாம்வந் தனர்நங் காத லோரே.

(பி - ம்.) * 'வளமலிசிறுதினையுணீஇயகானவர்' † 'இழக்குவன்மடமை யோனே' ‡ 'தலைமகளைக் கூட்டிய' § 'தலைவிதை'

எ - து, வரைவுகாரணமாக * நெட்டிடைகழிந்து பொருள்வயிற்போகிய தலைமகன் வந்தமையறிந்ததோழி உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குச் சொல்லியது.

(ப - ரை.) கிழங்ககழ்கேழல் உழுத புழுதிக்கண்ணே வித்தவினைந்த பயிரைக் காணவர்கொய்யுஞ் சிறப்புடையதெனும் அவன் அவ்விடத்து உறையாமையின் தனக்குப்புல்லென்று தோன்றுதலாற் 'புல்லென்குன்றம்' எனவும், 'புலம்புகொணெடுவரை' எனவும் இழித்துக்கூறப்பட்டதெனக் கொள்க. (கo)

உஎ.—கேழற்பத்து முற்றிற்று.

உஅ.—குரக்குப் பத்து.

உஎக. அவரை யருந்த மந்தி பகர்வர்
பக்கிற் றேன்று நாடன் வேண்டிற்
பசுப்போல் பெண்டிரும் பெறுகுவன்
றெல்கே ளாகலி னல்குமா லிவட்கே.

எ - து, தலைமகன் வரைவுவேண்டிவிடத் தமர்மறுத்துழிச் செவிலிச்குத் தோழி அறத்தொடுநின்றது.

(ப - ரை.) அவரையை நிறையத்தின்றமந்தி பண்டவாணிகர் பைபோலத் தோன்றுநாடனென்றது, ஆண்டுவாழ்வனவும் மேலாமுணவுகளிற்குறைவின்றி வாழும்நாடன்; எ - று. 'பசுப்போல்பெண்டிரும்' என்றது, வரைவெதிர்கொள்ளாத் தமர்மறுத்த தீங்கினைத் தங்கண்மேலேற்றி, இத்தீங்குசெய்யாது தான் நினைத்தவழியொழுகும் குணமுடைய பெண்டிர்பலரையும் பெறுகுவன், அவனேவேண்டினென்று கூறியவாறுகக்கொள்க.

'பசுப்போற் பெண்டிரும்' என்று பாடமோதுவாருமுளர். (க)

உஎஉ. கருவிரன் மந்திக் கல்லா வன்பற
முருவரைத் தீந்தே னெடுப்பி † யயல
துருகெழு நெடுஞ்சினைப் பாயு நாட
னிரவின் வருத லறியான்
வரும்வரு மென்ப டோழி யாயே.

(பி - ம்.) * 'நெட்டிடைக்கழித்து' † 'அல்ல துருகெழு'

எ - து, அல்லகுறிப்பட்டு நீங்குந்தலைமகன் சிறைப்புறத்தாலுக முன்னாள் நிகழ்ந்ததனைத் தோழிக்குச் சொல்லுவாள்போன்று தலைமகள் சொல்லியது.

(ப - வி.) மந்திக்கு ஒருமகவாகியபார்ப்பு மலைக்கட்பெருந்தேனிருலைக் கிளர்த்து எழுப்பி ஈக்கு வெருவி அதன் அயற்சிகரத்திலே பாயுமென்றது, தான் புகரக்கருதிவந்து நம்மையுணர்த்திச் சுற்றத்தார்பலரும் உணர்ந்தவதற்கு வெருவிப் பெயர்வான்; எ - று. (உ)

உஎஉ. அத்தச் செயலைத் * துப்புற மொண்டளிர்
புன்றலை மந்தி வன்பற ழாரு
நன்மலை நாட நீசெலி
னின்னயந் துறைவி யென்னினுங் கலிழ்மே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரியுந்தலைமகன், 'நின்றுணைவியை உடம் பழிவித்தேன், இனி நீயே இதற்கு உடம்படாது கலிழ்கின்றாய்' என்றுற்றுத் தோழிகூறியது.

(ப - வி.) பிரிவுடம்பட்டாளேயாயினும் நீபிரிந்துழி ஆற்றுளென்பதாம். அசோகந்தளிரை மந்திப்பார்ப்பு அருந்துமென்றது, இளமை கழிவதற்கு முன்னே வரைதல்வேண்டுமென்பதாம். (ஊ)

உஎச. மந்திக் கணவன் கல்லாக் கடுவ
ணெண்கேழ் வயப்புலி குழுமலின் விரைந்துடன்
குன்றுய ரடுக்கங் கொள்ளு நாடன்
சென்றனன் வாழி தோழியென்
மென்றோட் கவினும் பாயலுங் கொண்டே.

எ - து, வரைவிடைவைத்துப்பிரிந்துழி ஆற்றுவிக்குந்தோழிக்குத் தலை மகள் சொல்லியது.

(ப - வி.) மந்திக்கணவனாகிய கல்லாக்கடுவன் புலிமுழக்கு அஞ்சி வரை யகத்துப்பாயும் நாடனென்றது, நமக்கு உரியனாயொழுகுகின்றவன் யாம் எம்மைப்பாதுகாத்தரைக்கின்ற உரைக்கு அஞ்சிச்சென்றானென்பதாம். (எ)

உஎடு. குரங்கின் றலைவன் குருமயிர்க் கடுவன்
சூரலஞ் சிறுகோல் கொண்டு வியலறை
மாரி மொக்குள் புடைக்கு நாட்
யாகின் னயந்தன மெனினுமெம்
மாய்நலம் வாடுமோ வருளுதி யெனினே.

(பி - ம்.) * 'துப்புறமொண்மணி'

எ - து, வரையாதுவந்தொழுகுந்தலைமகன் இடையிட்டுவருதலால் எதிர்ப் பாடுபெறுதற்றோழி குறியிடத்து எதிர்ப்பட்டு அவன்கொடுமைகூறி நெருங்கிச் சொல்லியது.

(ப - வி.) நின்னயந்த எந்நலம்வாடுதல் ஒருதலையன்றே; அங்ஙனமாயினும் நின்னே யாங்கள் நயந்ததனை வெருளாது அருளப்பெறின் எந்நலம் வாடுமோ; எ - று. குரங்கின்றலைவனுகியகடுவன் சூரற்கோலைக்கொண்டு தானே அழிகின்ற மாரிமொக்குளைப்புடைத்து அழிக்குநாடனென்றது, நின்னை நயந்த எங்கணலம் நீவரையாமலே அழிகின்றவிதனை நீ இவ்விடையிட்ட ஒழுக்கத்தாலே அழியாநின்றுயென்பதாம். (ஙு)

உஎசு. மந்திக் காதலன் முறிமேய் கடுவன்
றண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்
பொங்க ளிளமழை புடைக்கு நாட
நயவா யாயினும் வரைந்தனை சென்மோ
கன்முகை வேங்கை மலரு
நன்மலை நாடன் பெண்டெனப் படுத்தே.

எ - து, வரையாதுவந்தொழுகுந்தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது.

(ப - வி.) மேல் கருக்கொண்டு முற்றிப் பயன்படுவதாய் இளமுகில் மந்தி நறைக்கொடிகொண்டு புடைக்கும் நாடனென்றது, வரைந்து மகப்பெறுதற்கு உரியளாகிய இவளை இம்மறைந்தவொழுக்கத்தாலே கெடுகின்றுயென்பதாம். 'கல்முகை வேங்கைமலரும் நாட' என்றதனால், வரைதற் குரியபருவமும் கூறியவாறுயிற்று. (சு)

உஎஎ. குறவர் முன்றின் மாதீண்டு துறுகற்
கல்லா மந்தி * கடுவனே டுகளுங்
குன்ற † நாடனின் மொழிவ லென்றும்
பயப்ப நீத்த லென்னிவள்
கயத்துவளர் குவளையி னமர்த்த கண்ணே.

எ - து, வரையாது வந்தொழுகுந்தலைமகன் புணர்ந்துநீங்குழி எதிர்ப் பட்டதோழி வரைவுகடாயது.

(ப - வி.) குறவர்முன்றிலில் மாதீண்டுதுறுகற்கண்ணே நாணுது மந்தி கடுவனோடு உகளுநாடனென்றது, சுற்றத்தார்நடுவே இவ்வொழுக்கம் புலனுகிய ஞான்று விளையும் ஏதத்திற்கு நாணுதோயென்பதாம். (எ)

(பி - ம்.) * 'கடுவனெடுக்கும்' † 'நாடனின்மொழிவல்'

உஎஅ. சிலம்பின் வெதிரத்துக் கண்விடு * கழைக்கோல்
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென விலஞ்சி
மீனெறி தூண்டிலி னிவக்கு நாட
னூற்றோர் மறவா நோய்தந் து
கண்டோர் தண்டா நலங்கொண் டனனே.

எ - து, வரையாதுவந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலை மகள் தோழிக்குச்சொல்லியது.

(ப - ரை.) குரங்கு தன்மேலிருந்துழிவீழ்ந்து அது பாய்ந்துபோவுழி நிமிர்கின்றமூங்கிற்கோல் மீனெறிதூண்டில்போல ஓங்குநாடனென்றது, தன் னெஞ்சத்து அன்புளதாகியகாலத்து வீழ்த்து வீழ்த்தொழுகி அன்பற்ற காலத்துப் பணிவின்றித் தலைமைசெய்து நம்நலங்கொண்ட தன்கொடுமை தோன்ற ஒழுகுகின்றானென்பதாம். (அ)

உஎக. † கல்லிவ ரிற்றி புல்லுவன வேறிக்
குளவி மேய்ந்த மந்தி துணையொடு
வரைமிசை யுகளு நாட ரீவரிற்
கல்லகத் ததுவெம் மூரே
யம்பற் சேரி யலராங் கட்டே.

எ - து, இரவுக்குறிவேண்டிற் றலைமகனைத் தோழி வரவருமைகூறி மறுத் தது.

(ப - ரை.) 'கல்லகத்ததுவெம்மூர்' என்றது, சூழ்ந்த மலைகளின்நடுவகத் தது எம்மூர்; எ - று. இற்றிமேற்படர்ந்த குளவித்தளிரை மேய்ந்து வரை யகத்திலே மந்தி கடுவனோடுகளும் நாடனுதலான், இதற்குமுன்பு இவள் தின் னோடு நுகர்ந்ததேகொண்டு இனி இவள் தின்பதிக்கண் வாழ்தல்வேண்டு மென்பதாம். (க)

உஅ०. கருவிரன் மந்திக் கல்லா ‡ வன்பார்ப்
பிருவெதி ரீர்ங்கழை யேறிச் சிறுகோன்
மதிபுடைப் பதுபோற் றோன்றுநாட
வரைந்தனீ யெனைக் கேட்டியா
னுரைத்தனெ னல்லெனோ வஃதென் யாய்க்கே.

(பி - மீ.) * 'கணைக்கோல்', 'கணைக்கோல்' † 'கல்லிவரித்தி' ‡ 'இளம்பார்ப் பிருவெதிரங்கழை'

எ - து, புணர்ந்துடன்போகிய தலைமகன் தலைமகளைக் கரணவகையான் வரைந்தாளுக, எதிர்சென்றதோழிக்கு 'இனி யான்இவளைவரைந்தமை ஞமர்க்கு உணர்த்தவேண்டும்' என்றாளுக அவள்சொல்லியது.

(ப - ரை.) குரங்கின் இளம்பார்ப்பு இருவெதிர்ங் கழையேறி மதிபுடைப் பதுபோற்றோன்று நாடவென்றது, தீங்குசெய்வாயைப்போலத் தோன்றுவ தல்லது உண்மைவகையாற் செய்யாயென்பதாம். (கo)

உ அ.—குரக்குப் பத்து முற்றிற்று.

உகூ.—கிள்ளைப் பத்து.

உஅக. வெள்ள வரம்பி * னூழி போகியுங்
கிள்ளை வாழிய பலவே யொள்ளிழை
யிரும்பல் கூந்தற் கொடிச்சி
பெருந்தோட் காவல் காட்டி யவ்வே.

எ - து, ஆயத்தோடு விளையாட்டுவிருப்பினுற் பொழிலகம்புகுந்த தலை வியை எதிர்ப்பட்டு ஒழுகுகின்றதலைமகன் அவள் புனங்காவற்கு உரியளாய் நின்றதுகண்டு மகிழ்ந்துசொல்லியது. (க)

உஅஉ. சாரற் புறத்த பெருங்குரற் சிறுதினைப்
பேரமர் மழைக்கட் கொடிச்சி கடியவுஞ்
சோலைச் சிறுகிளி † யுண்ணு நாட
வாரிருள் பெருகின ‡ வாரல்
கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே.

எ - து, இரவுக்குறி நேர்ந்ததோழி தலைமகன்வந்து புணர்ந்துநீங்குழி அவளெதிர்ப்பட்டுச் சொல்லியது.

(ப - ரை.) கொடிச்சி கடியவும் சோலைச்சிறுகிளி தினையையுண்ணுநாட வென்றது, காவலர் காத்தொழுகவும் களவொழுக்கத்தையே விரும்பாநின்ற வெனபதாம். (உ)

(பி - ம்.) * 'ஊழிபோயும்' † 'உண்ணுநாட' ‡ 'வாரால்'

உஅங. வன்கட் கானவன் மென்சொன் மடமகள்
புன்புல மயக்கத் தழுத வேனற்
பைம்புறச் சிறுகிளி கடியு * நாட
பெரிய கூறி னீப்பினும்
பொய்வலைப் படூஉம் பெண்டுதவப் பலவே.

எ - து, தோழி வாயின்மறுக்கவும் தலைமகன் ஆற்றுமைகண்டு தலைமகள் வாயில்நேர அவன்பள்ளியிடத்தாஞ்சிருந்துழிப் புக்கதோழிகூறியது.

(ப - ரை.) தினைப்புனத்துப் பலவாய்ப்படிகின்ற கிளிகளை ஒருத்தி தன்னாற்காக்கமுடியாதாயினும் அவற்றை அவள் கடியமுயலுநாடவென்றது, நின்னோடு இன்பநுகர்ச்சி விரும்புமகளிரை யாங்கள் விலக்கமுயல்கின்றது முடியாதென்பதாம். 'பெரிய கூறி னீப்பினும் பொய்வலைப்படூஉம் பெண்டுதவப்பலவே' என்றது, தம்தமராயுள்ளார் நின்குறைபலவுங்கூறி னீப்பினும் நின்பொய் வலைப் படூஉம் பெண்டிர்பலர்; எ - று. இவளும் அவருள் ஒருத்தியென்பதாம். (கூ)

உஅச. அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கா
லிருவி னீள்புனங் கண்டும்
† பிரித றேற்றுப் பேரன் பினவே.

ஏ - து, தினையரிந்துழிக் கிளியைநோக்கிக்கூறுவாள்போற் சிறைப்புறமாக நம்படுத்தது. (உ)

உஅந. பின்னிருங் கூந்த னன்னுதற் குறமகண்
மென்றினை ‡ நுவணை யுண்டு தட்டையி
னேவனச் சிறுகிளி கடியு நாட
§ வீங்குவனை நெகிழப் பிரிதல்
யாங்கு || வல் லுநையோ வீங்கிவட் டுறந்தே.

எ - து, ஒருவழித் தணந்துவந்ததலைமகற்குத் தோழி கூறியது.

(ப - ரை.) குறமகள் தினைப்பிண்டியையுண்டு ஐவனச்சிறுகிளிகடியும் நாடவென்றது, நின்னோடு இக்காலத்து இன்பநுகர்ந்து பின்பு நின்மனைச் செல்வமும் பிறமகளிரொழியத் தானேநுகரும் வேட்கையுடையாளைப் பிரிந்து ஒழுகுகின்றையென்பதாம். (ஊ)

(பி - ம்.) * 'நாடன்' † 'பிரிதறேற்ற' ‡ 'நுவனை' § 'விலங்குவளை' || 'வல்லினையோ'

உஅசு. சிறுதினை கொய்த விருவி வெண்காற்
காய்த்த வவரைப் படுகிளி கடியும்
யாணர ராகிய நன்மலை நாடன்
* புகரின்று நயந்தனன் போலுங்
கவருந் தோழியென் மாமைக் கவினே.

எ - து, உடன்போக்குத் துணிந்த தலைமகன் அஃதொழிந்து தானே வரைவிடைவைத்துப் பிரியநினைந்ததனைக் குறிப்பினுணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது; தலைமகன் வரைவிடைவைத்துப் பிரிவலென்றவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியதூஉமாம்.

(ப - ரை.)* புகரென்றது உடன்போதலை. தினையிற்கடிந்த கிளியைத் தினையரிகாற்கண்விளைந்த அவரைக்கண்ணுங்கடியும் நாடனென்றது, வரையா தொழுகுதலன்றி உடன்போதலையும் நம்மை விலக்காதின்றனென்பதாம். (சு)

உஅஎ. நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெரூஉ நாட
† வல்லை மன்ற பொய்த்தல்
‡ வல்லாய் மன்றநீ யல்லது செயலே.

எ - து, இன்னகாளில் வரைவலெனக்கூறி அக்காளில் வரையாது பின் அல்வாறுகூறும் தலைமகற்குத் தோழிகூறியது.

(ப - ரை.) தமக்கு ஓரிடையூறுஞ்செய்யாத நெடுவரைக்கண்ணே வாழும் வருடையைத் தினைமேய்ந்தகிள்ளை வெரூஉம் நாடனென்றது, நீசொன்ன போழ்தே எஞ்சுற்றத்தார் வரைவிற்கு இடையூறுசெய்யாரென்பதறியாது வெருவுகின்றாய் என்பதாம். (எ)

உஅஅ. நன்றே செய்த வுதவி § நன்றுதெரிந்
தியாமெவன் செய்குவ நெஞ்சே காமர்
மெல்லியற் கொடிச்சி காப்பப்
பல்குர லேனற் பாத்தருங் கிளியே.

எ - து, கிளிகள் புனத்தின்கட் படியாநின்றனவென்று தலைவியைக் காக்கவேவியவழி அதனையிகந்த தலைமகன் உவந்து தன்னெஞ்சிற்குச் சொல்லியது. (அ)

(பி - மீ.) *'புகரின் றுய்ந்தனன்' † 'வல்லைமன்றம்ம', ‡ 'வல்லாய்மல்லீ' § 'நன்றிதிரிந்து'

உஅக. கொடிச்சி யின்குரல் கிளிசெத் தடுக்கத்துப்
பைங்குர லேனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மால்வரை நாட * வரைந்தனை கொண்மோ.

எ - து, இற்செறித்தபின்னர்த் தோழி வரைவுகடாவுழி முகிர்ந்த திணைப் புனம் இவள்காத்தொழிந்தால் † வரைவுவலென்றற்கு அவள்சொல்லியது. (கூ)

உகூ0. அறம்புரி செங்கோன் மன்னனிற் றுஞனி
சிறந்தன போலுங் கிள்ளை பிறங்கிய
பூக்கமழ் கூந்தற் கொடிச்சி
நோக்கமும் படுமவ ளோப்பமும் படுமே.

எ - து, காவன்மிகுதியான் இரவுக்குறி மறுக்கப்பட்டு நீங்கியதலைமகன் வந்தழி அவன்கேட்டு வெறுப்புத்தீர்த்தற்பொருட்டால் திணைப்புனங்காவல் தொடங்காநின்றாளென்பது தோன்றத் தோழிகூறியது. (கo)

(பி - மை.) மன்னனென்றது, தலைமகனை.

உகூ.—கிள்ளைப்பத்து முற்றிற்று.

ங0.—மஞ்ஞைப் பத்து.

உகூக. மயில்க ளாலக் குடிஞை யிரட்டுந்
துறுகல் லடுக்கத் ததுவே பணைத்தோ
ளாய்தழை தொடங்கு மல்குற்
காதலி யுறையு ணனிநல் லூரே.

எ - து, வரைவிடைவைத்துப் பிரிந்து மீள்கின்றதலைமகன் சொல்லியது. (க)

உகூட. மயில்க ளாலப் பெருந்தே னிமிரத்
தண்மழை தழீஇய மாமலை நாட
நின்னினுஞ் சிறந்தன ளெமக்கே நீநயந்து
நன்மனை யருங்கடி யயர
வெங்கலஞ் சிறப்ப ‡ யா மினிப்பெற் றிலமே.

(பி - மீ.) * 'மலைந்தனை கொண்மோ' † 'வரைபவென்றற்கு' ‡ 'யாயினிப் பெற்றிலமே'

எ - து, பின்முறையாக்கியபெரும்பொருள்வதுவை மூடித்தவளை இல்லத்துக் கொண்டுபுகுந்துழித் தலைமகள் உவந்துசொல்லியது.

(ப - ரை.) மழைப்பருவம் வேண்டியிருக்கின்ற மயில்கள்ஆலத் தேன்கள் இமிர மழைபெய்யுநாடவென்றது, யாங்கள் கருதியிருக்கின்ற பெரும் பொருளை உவப்ப முடித்தனை; எ - று. (உ)

உ௯௫. சிலம்புகமழ் காந்த ணறுங்குலை யன்ன
நலம்பெறு கையி * னென் கண்புதைத் தோயே
பாய லின்றுணை யாகிய பணைத்தோட்
டோகை மாட்சிய மடந்தை
நீயல † துளரோவென் ‡ னெஞ்சமர்ந் தோரே.

எ - து, பகற்குறியிடம்புக்க தலைமகன் தலைவி பின்னுக மறையவந்து § கண்புதைத்துழிச் சொல்லியது.

(ப - ரை.) 'நீயல்லது உளரோவென்னெஞ்சமர்ந்தோரே' என்றது, நீயல்லது பிறருளராயினன்றே நான்கூறுவது அறிதல்வேண்டிக் கண் புதைக் கற்பாலது; அஃதில்லாதவழிப்புதைப்பது என்னென்று அவள்பேதைமை யுணர்த்தியதாம். (ஊ)

உ௯௬. எரிமருள் வேங்கை யிருந்த தோகை
யிணைமணி மடந்தையிற் றோன்று நாட
வினிதுசெய் தணையா னுந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே.

எ - து, வதுவைசெல்லாநின்றுழித் தலைமகற்குத் தோழிகூறியது.

(ப - ரை.) வதுவையில் தலைவிக்கு மலரணியக்கண்டதோழி 'இவ்வாறும்படி அன்றேசூட்டினை' எனச் சொல்லியவாறும். மலர்ந்தவேங்கைக் கணிருந்த தோகை பொன்னணிமடந்தையில் தோன்றுநாடவென்றது, நீவரையாதொழுகுகின்ற ஞான்று நின்றமர் பொன்னணிந்த இன்றுபோலச் சிறப்பவொழுகினையென்பதாம். (எ)

(பி - ம்.) * 'எங்கண்புதைத்' † 'உளனோ' ‡ 'நெஞ்சயர்ந்தோரே' 'நெஞ்சமர்ந்தோனோ' § 'அவனதுகண்புதைத்துழி'

உகூடு. வருவது கொல்லோ தானே வாரா
தவணுற்ற மேவலி னமைவது கொல்லோ
புனவர் கொள்ளியிற் * புகல்வரு மஞ்ஞை
யிருவி யிருந்த குருவி † வருந்துறப்
பந்தாடு மகளிரிற் படர்தருங்
‡ குன்றுகெழு நாடனெடு சென்றவென் னெஞ்சே.

எ - து, தலைமகன் வரைவிடைவைத்துப் பிரிந்து நீட்டித்துழி உடன் சென்றநெஞ்சினைத் தலைமகள் நினைந்துகூறியது.

(ப - ரை.) புனவர்கொள்ளிக்கு அஞ்சித் தன்புகலிலேசெல்லும் மயில் புனங்கொய்தபின்பு அரிதாளிலேயிருந்தகுருவி எழுவதுவிழுவதாய் வருந்துறச் சிறகைவிரித்து ஆடிச்செல்லும்நாடனென்றது, பின்பு வரைந்துகொள்ளக் கருதாதே அலரஞ்சித் தன்மனைவயிற்சென்றவன் இக்காலத்து யானும் என் ஞயத்தாரும்வருந்துறப் பிரிந்தானென்பதாம். (ஙி)

உகூசு. கொடிச்சி காக்கும் பெருங்குர லேன
லடுக்கன் மஞ்ஞை கவரு நாட
நடுநாட் கங்குலும் வருதி
கடுமா தாக்கி னறியேன் யானே.

எ - து, இரவுக்குறிவருகின்ற தலைமகற்குத் தோழி § ஆற்றாமைகூறி மறுத்தது.

(ப - ரை.) ‘அறியேன்யான்’ என்றது, இதனுள்விளைவன யானறியே னென்பதாம். குறத்திகாக்குந்தினையை மஞ்ஞை கவருநாடனென்றது, நின் ஞட்டுக்குத்தக்க களவினுகர்ச்சியே விரும்புகின்றுபென்பதாம். (சு)

உகூஎ. விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாட
பிரியினும் || பிரிவ தன்றே
நின்னெடு மேய மடந்தை நட்பே.

எ - து, ஒருவழித்தணந்து வரையவேண்டுமென்ற தலைமகற்குத் தோழி கூறியது.

(ப - ரை.) மலர்ந்த வேங்கைச்சினைக்கணிருந்த தோகை மலர்கொய்யு மகளிரைப்போலத் தோன்றுநாடனென்றது, நீ மனத்தால் எங்கட்கு நல்லது புரியாயெனினும் நன்மைசெய்கின்றாய்போலத் தோன்றுகின்றுயென்பதாம். ()

(பி - மீ.) * ‘கலவமஞ்ஞை’ † ‘வருத்துற’, ‘வெருவுற’ ‡ ‘குன்றகாட னெடு’ § ‘ஆற்றுமைகூறி’ || ‘பிரியாயன்றே’

உகூஅ. மழை * வர வறியா மஞ்ஞை யாலு
மடிக்க னல்லூர் ரசைநடைக் கொடிச்சி
தானெம் மருளா ளாயினும்
† யாந்தன் னுள்ளுபு மறந் ‡ தறி யேமே.

எ - து, தலைமகற்குக் குறைநேர்ந்ததோழி தலைமகட்குணர்த்தியவழி அவள் நாணத்திஞல் மறைத்தொழுகியவதனைக் கூறக்கேட்ட தலைமகன் சொல்லியது.

(ப - ரை.) மழையினதுவரவையறிந்து மஞ்ஞை ஆலுமென்றது, யான் நின்னிடத்துவருகின்ற வரவினையறிந்து இதற்கு அவள் மகிழாநிற்கும்; நீ கூறுகின்றது பொய்யென்பதாம். (அ)

உகூக. குன்ற நாடன் குன்றத்துக் கவாஅற்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையு
மஞ்சி லோதி § யசைநடைக் கொடிச்சி
கண்போன் மலர்தலு மரிதிவ
டன்போற் சாயன் மஞ்ஞைக்கு மரிதே.

எ - து, இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்து நீங்கியநிலைமைக்கண் தலைமகள் ஆயவெள்ளத்தோடுகூடி நிற்கக்கண்ட தலைமகன் மகிழ்ந்தவள்ளத்தனாய்த் தன்னுள்ளேசொல்லியது. (கூ)

(ப - ரை.) குன்றநாடனென்றது, அந்நிலத்துக்குரியனாகிய மூருகனை.

ஈ00. கொடிச்சி கூந்தல் போலத் தோகை
யஞ்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்
வந்தன னெதிர்ந்தனர் கொடையே
யந்தீங் கிளவி பொலிகநின் சிறப்பே.

எ - து, தலைமகன்றானே வரைவுவேண்டிவிடச் சுற்றத்தார் கொடை நேர்ந்தமை தலைமகட்குத் தோழிசொல்லியது.

(ப - ரை.) கொடிச்சிகூந்தல் போலவேண்டி மஞ்ஞை சிறகைவிரிக்கும் வெற்பனென்றது, நின்மகிழ்ச்சிக்குத்தக நின்தமர் மகிழ்ச்சிகூர்ந்தாரென்பதாம். (கo)

ஈ0.—மஞ்ஞைப்பத்து முற்றிற்று.

மூன்றாவது
குறிஞ்சி முற்றிற்று.
கபிலர்.

(பி—ரீ.) * 'வரலறியா' † 'யான்றனுள்ளுபு' ‡ 'அறியேனே' § 'அசை யியல்'

நான்காவது

பாலை.

ஈக.—செலவழுங்குவித்த பத்து.

ஈ0க. மால்வெள் ளோத்திரத்து மையில் வாலிண
ரருஞ்சுரஞ் செல்வோர் சென்னிக் கூட்டு
மவ்வரை யிறக்குவை யாயின்
மைவரை நாட வருந்துவள் பெரிதே.

எ - து, பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்குச் சொல்லியது.

